# பத்திரிக்கை செய்தி

## இரு துறை கூட்டுத் தணிக்கை (Surprise Check)

சென்னை-12, ஓட்டேரி, மலையப்பன் தெரு, எண்.47 என்ற முகவரியிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய சென்னை எழும்பூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அரசு பணிகளை செய்வதற்கு லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி செயற்பொறியாளர் அலுலகத்தில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து 14.12.2017 அன்று மாலை சுமார் 4.15 மணி முதல் இரவு சுமார் 9.30 மணி வரை இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தணிக்கையின் போது செயற்பொறியாளர் திரு.ஆ.நா.முருகதாசன் அவர்களிடம் கணக்கில் வராத ரூ.1,50,000/-, தனித்தனி கட்டுகளாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த பணத்துடன் ஒரு சிறிய துண்டு சீட்டு இணைக்கப்பட்டு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பணம் தொடர்பாக செயற் பொறியாளர் உரிய விளக்கம் அளிக்காததால் இந்த தொகை லஞ்சப்பணமாக இருக்காலம் என்ற சந்தேகத்தில் ஆய்வு குழுவால் கைப்பற்றப்பட்டது.